1971 ஜூலை 28]

சோழன் கோட்டத்தினருகே ஊசிவாய்க்காலின் குறுக்கே பாலம்.

* 502 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்-சீர்காழி தாலுக்காக்களுக்கிடையே சோழன்கோட்டம் அருகில் ஊசிவாய்க்காலுக்குக் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பாலம் அமைப்பதற்கான செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : சீர்காழி தாலுகாவையும் மாயூரம் தாலுகாவையும் இணைக்கும் சோழன்கோட்டம் அருகில் ஊசிவாய்க்காலுக்கு குறுக்கே ஒரு பாலம் கட்டுவதற்கு 1964-ம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் அன்று ஆட்சித் தலைவராக இருந்த திரு. வேதநாராயணன் அவர்கள் ஒரு அடிக்கல் நாட்டியுள்ளார். இன்றுவரை ஏழு ஆண்டுகள் முடிந்தும்கூட அந்தப் பாலம் கட்டுவதற்கான வேலை துவங்கப்படவில்லை. அதற்கான காரணங்களை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த வாய்க்காலின்மேல் ஒரு பாலம் அமைக்க தோராயமாக 25,000 ரூபாய் தேவைப்படும் என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அப்பாலம் அமைப்பில் ஏற்படும் செலவில் மாயூரம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியங்கள் 50% ஏற்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வாய்க்காலின் நீர் பெருக்குத் தன்மை போன்ற விவரங்கள் பொதுப்பணித் துறையிடமிருந்து ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு பாலம் அமைப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்படும்.

ஆனந்ததாண்டவபுரம்-மன்னிப்பள்ளம் சாலை

* 503 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மாயூரம் தாலுக்காவில் ஆனந்ததாண்டவபுரத்தையும் சேத்தூர் மன்னிப்பள்ளத்தையும் இணைக்கும் சாலையை செப்பனிட அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : இந்த ஆனந்ததாண்டவபுரம்-சேத்தூர் மன்னிப்பள்ளம் சாலையில் விவசாய விளைபொருள்கள் அதிகமாக எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. அங்கு போக்குவரத்து மிகவும் அதிகரித்திருப்பதால் இனியாவது அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து அந்தச் சாலையை அமைத்துத் தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சேத்தூர் மன்னிப்பள்ளம் மாயூரம் ஊராட்சி மன்றத்தில் அடங்கிய ஊராட்சிமன்றச் சாலையாகும். இதை அபிவிருத்தி செய்ய தோராயமாக ரூ. 2,80,000 தேவைப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இச்சாலை அபிவிருத்தி வேலைகள் அங்கீகரிக்கப்பட்ட சாலை அபிவிருத்தித் திட்டங்களிலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகல்